## செயற்கை முறையில் கனிய வைத்த 2 ஆயிரம் கிலோ மாம்பழம் பறிமுதல்

First Published : 19 Jun 2010 03:46:02 AM IST

சென்னை, ஜூன் 18: சென்னையில் செயற்கை முறையில் பழுக்க வைத்து விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்த 2 ஆயிரம் கிலோ மாம்பழங்களை மாநகராட்சி அதிகாரிகள் வெள்ளிக்கிழமை பறிமுதல் செய்தனர்.

÷சென்னை மாநகராட்சியின் 10 மண்டலங்களிலும் மாம்பழ மொத்த விற்பனை நிலையங்கள், சில்லறை விற்பனை நிலையங்கள் மற்றும் குடோன்களில் மாநகராட்சி சுகாதார ஆய்வாளர்கள் வெள்ளிக்கிழமை ஆய்வு மேற்கொண்டனர்.

÷அப்போது லாயிட்ஸ் சாலை, சிஐடி காலனி, மீர்சாகிப்பேட்டை மார்க்கெட், ஜாம் பஜார் மார்க்கெட் ஆகிய பகுதிகளில் செயற்கை முறையில் பழுக்க வைக்கப்பட்ட மாம்பழங்கள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது.

÷இதைத் தொடர்ந்து விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த 2 ஆயிரம் கிலோ மாம்பழங்களையும், பழுக்க வைப்பதற்காக பயன்படுத்தப்பட்ட கால்சியம் கார்பைடு கற்களையும் அதிகாரிகள் பறிமுதல் செய்தனர்.

÷இந்தப் பழங்களை சாப்பிடுபவர்களுக்கு வயிற்று வலி, வயிற்றுப் போக்கு மற்றும் புற்றுநோய் ஏற்படவும் வாய்ப்பு உள்ளது என சுகாதார ஆய்வாளர்கள் எச்சரித்தனர்.

## மேட்டூர் அணை நீர்மட்டம் 80.64 அடி

First Published : 19 Jun 2010 09:45:20 AM IST

சேலம், ஜூன் 18: மேட்டூர் அணையின் நீர்மட்டம் வெள்ளிக்கிழமை மாலை 4 மணி நிலவரப்படி 80.64 அடியாக இருந்தது. அணைக்கு விநô்டிக்கு 1,974 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிரு ந்தது. அணையிலிருந்து விநô்டிக்கு 1,014 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்பட்டது. அ ணையின் நீர் இருப்பு 42.59 டி.எம்.சி.

**கள் இறக்க அனுமதிக்க வேண்டும்: கொங்கு நாடு முன்னேற்ற கழகம் மனு**

First Published : 19 Jun 2010 03:41:17 AM IST



விவசாயிகள் மற்றும் விசைத்தறித் தொழிலாளர்கள் கோரிக்கைகள் குறித்து தலைமைச் செயலகத்தில் வெள்ளிக்கிழமை முதல்வர் கருணாநிதியை சந்தித்து விளக்குகிறார் கொங்கு

சென்னை, ஜூன் 18: கள் இறக்க அனுமதிக்க வேண்டும் என்பது உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் குறித்து முதல்வர் கருணாநிதியிடம் கொங்கு நாடு முன்னேற்ற கழக நிர்வாகிகள் மனு அளித்தனர்.

தலைமைச் செயலகத்தில் முதல்வர் கருணாநிதியை வெள்ளிக்கிழமை அவர்கள் சந்தித்துப் பேசினர். இந்தச் சந்திப்பு 20 நிமிடங்கள் வரை நடைபெற்றது. பின்னர், செய்தியாளர்களிடம் அந்தக் கழகத்தின் தலைவர் பெஸ்ட் ராமசாமி அளித்த பேட்டி:

பல்வேறு கோரிக்கைகள் குறித்து முதல்வர் கருணாநிதியிடம் மனு அளித்தோம். முக்கிய கோரிக்கையாக கள் இறக்க அனுமதி வழங்க வேண்டும் என வலியுறுத்தினோம். உலகத் தமிழ்ச் செம்மொழி மாநாடு நடத்தி முடிக்கப்பட்ட பிறகு ஜூலை மாதத்தில் சாதகமான பதில் வரும் என முதல்வர் கருணாநிதி தெரிவித்துள்ளார்.

கொங்கு மண்டலத்தில் விசைத்தறிப் பிரச்னை தலைவிரித்தாடுகிறது. அதுகுறித்து, முதல்வரிடம் விவாதித்தோம். விசைத்தறி பிரச்னையைத் தீர்க்க அமைச்சர்கள், அதிகாரிகள் மற்றும் சங்கப் பிரிதிநிதிகளைக் கூட்டி பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என கேட்டுக் கொண்டோம். கரும்பு டன்னுக்கு ரூ.2 ஆயிரத்து 500 அளிக்க வேண்டும், பால் உற்பத்தியாளர்கள், மானாவாரி நிலங்களுக்கு மானியம் ஆகியவற்றைக் கொடுக்க வேண்டும் என வலியுறுத்தினோம்.

முதல்வருடனான சந்திப்பு திருப்திகரமான இருந்தது. கள் இறக்க விரைவில் அனுமதி கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது என்றார் பெஸ்ட் ராமசாமி.

தினமலர்

**வண்ண மீன்கள் ஏற்றுமதி புரிந்துணர்வு ஒப்பந்தம்**

சிதம்பரம் : சிதம்பரம் அண்ணாமலை பல்கலைக்கழக கடல் வாழ் உயிரியல் உயராய்வு மையத்தில் உற்பத்தியாகும் வண்ண மீன்கள் ஏற்றுமதி குறித்து பல்கலைக்கழகமும், கேரள கவில் நிறுவனமும் இணைந்து புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்யப் பட்டது.கடலூர் மாவட்டம் சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக் கழக கடல் வாழ் உயிரியல் உயராய்வு மையத்தில் உலக அளவில் முதல் முறையாக வண்ண மீன்கள் கழிமுக நீரில் உற்பத்தி செய்யப்படுகிறது. இங்கு உற்பத்தியாகும் மீன்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யும் வகையில் கேரளா அக்வா வெண்டர் இன்டர்நேஷனல் லிமிடெட் (கவில்) மூலம் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் அண்ணாமலை பல்கலைக்கழக அரங்கில் நேற்று நடந்தது. துணைவேந்தர் ராமநாதன், கவில் மேலாண் இயக்குனர் கோபாலகிருஷ்ண நாயர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டனர். நிகழ்ச்சியில் பதிவாளர் ரத்தினசபாபதி, இயக்குனர் பாலசுப்ரமணியன், துணை பேராசிரியர் அஜித்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**விவசாயிகள் சங்கம் வேண்டுகோள் தடையை மீறி தைல மரங்கள் நடவு செய்தால் நடவடிக்கை**

புதுக்கோட்டை: புதுக்கோட்டையில் தமிழ்நாடு விவசாயிகள் சங்கத்தின் மாவட்ட செயற்குழு கூட்டம் நடந்தது. மாவட்டத் தலைவர் சோமையா தலைமை வகித்தார். மாநிலக்குழு உறுப்பினர் முத்துக்குமரன், மாவட்டச் செயலாளர் மாதவன், கௌரவத் தலைவர் அழகர்சாமி உட்பட பலர் கலந்துகொண்டனர். புதுக்கோட்டை மாவட்டத்தில் பருவமழை பொய்த்து வருவதால் நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருகிறது. நிலத்தடி நீர்மட்டம் குறைய தைல மரங்களும் காரணம்என ஆய்வு மூலம் தெரிகிறது. இதை மெய்பிக்கும் விதத்தில் தைல மரங்கள் அதிகமாக சாகுபடி செய்யப்பட்டுள்ள பகுதிகளில் நிலத்தடி நீர்மட்டம் 200 அடிக்கு கீழ் சென்றுள்ளது தெரியவந்துள்ளது. மேலும் அந்த பகுதிகளில் தைலமரக் கன்றுகளை தவிர வேறு எந்த மரக்கன்றுகள் நடவு செய்தாலும் அவை தண்ணீரின்றி கருகிவிடும் நிலையில் உள்ளது. நிலத்தடி நீர்மட்டத்தை பாதுகாக்கும் விதமாக மாவட்டத்தில் தைல மரங்கள் நடவு செய்ய தடைவிதிக்க வேண்டும் என்ற விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று இதற்கு மாவட்டம் நிர்வாகம் ஏற்கனவே தடை விதித்துள்ளது. இருந்தும் அறந்தாங்கி, ஆலங்குடி, கொத்தமங்கம், கந்தர்வக்கோட்டை, அன்னவாசல், இலுப்பூர், அரிமளம், ராயவரம் போன்ற பகுதிகளில் வனத்துறைக்கு சொந்தமான நிலங்கள் மற்றும் தனியார் நிலங்களில் தைல மரங்கள் தொடர்ந்து நடவு செய்யப்பட்டு வருகிறது.

தடையை மீறி தைல மரம் நடவு செய்பவர் மீது கடும் நடவடிக்கை எடுப்பதோடு, அவற் றை அப்புறப்படுத்த மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை வேண்டும் உட்பட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

**ஈரோடு மாவட்டத்தில் நாட்டு சர்க்கரை உற்பத்தி அதிகரிப்பு**

ஈரோடு: கரும்பு வரத்து அதிகரித்துள்ளதால் நாட்டு சர்க்கரை உற்பத்தி அதிகரித்துள்ளது. ஈரோடு மாவட்டத்தில், பவானிசாகர் அணை மூலம், தடப்பள்ளி, அரக்கன்கோட்டை, காலிங்கராயன் வாய்க்கால் பாசனத்தில், கரும்பு அதிகளவு சாகுபடி செய்யப்படுகிறது. சராசரியாக ஈரோடு மாவட்டத்தில் 20 ஆயிரம் ஏக்கருக்கு மேல் கரும்பு சாகுபடி செய்யப்படுகிறது. 12 மாத பருவப்பயிரான கரும்பு இரண்டு சீஸனில் அறுவடை செய்யப்படுகிறது. குளிர்காலங்களில் டிசம்பர், ஜனவரி மாதங்களில் அறுவடை செய்யும் கரும்பில், பிழிதிறன் அதிகமாக இருக்கும்.

இரண்டாம் பருவமான ஜூனில் அறுவடை செய்யும் கரும்பு, கோடை காலம் முடிந்து அறுவடை செய்வதால் பிழிதிறன் குறைவாக இருக்கும். முதல் பருவத்தில் அறுவடை செய்யப்படும் கரும்பில் டன்னுக்கு 125 கிலோ வரை நாட்டு சர்க்கரை உற்பத்தி செய்ய முடியும். ஜூனில் அறுவடையாகும் கரும்பில் 115 கிலோ வரைதான் நாட்டு சர்க்கரை உற்பத்தி செய்ய முடியும். தற்போது, இரண்டாம் பருவ அறுவடை நடந்துவருவதால், தனியார் சர்க்கரை ஆலைகளில் உற்பத்தி அதிகரித்துள்ளது. ஈரோட்டைச் சுற்றி 150க்கும் மேற்பட்ட தனியார் சர்க்கரை ஆலைகள் உள்ளன. கரும்பு வரத்து அதிகரித்துள்ளதால், தனியார் சர்க்கரை ஆலைகளில் நாட்டு சர்க்கரை உற்பத்தி அதிகரித்துள்ளது. ஒரு டன் கரும்பில் 115 கிலோ வரை நாட்டு சர்க்கரை உற்பத்தி செய்யப்படுகிறது. ஒரு குவிண்டால் சர்க்கரை 1,500 ரூபாய்க்கு விற்பனை செய்யப்படுகிறது.

இதுகுறித்து தமிழக விவசாயிகள் சங்கத்தை சேர்ந்த சிவசுப்பிரமணியன் கூறியதாவது: கோடையில் "353' ரக கரும்பை விவசாயிகள் சாகுபடி செய்து அறுவடை செய்கின்றனர். கோடையில் அறுவடை செய்வதால், கரும்பின் பிழிதிறன் குறைவாக இருக்கும். இதனால், டன்னுக்கு 115 கிலோ வரைதான் நாட்டு சர்க்கரை கிடைக்கும். இருப்பினும், கரும்பு வரத்து அதிகரித்துள்ளதால், தனியார் நாட்டு சர்க்கரை ஆலைகளில் உற்பத்தி அதிகரித்துள்ளது. ஒரு குவிண்டால் நாட்டு சர்க்கரை 1,500 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இம்மாதம் இறுதிவரை அறுவடை நடக்கும் என்பதால், தனியார் நாட்டு சர்க்கரை ஆலைகளில் உற்பத்தி மேலும் அதிகரிக்கும். இவ்வாறு அவர் கூறினார்.

**கசப்பு குறைந்த நாட்டு பாகற்காய் உற்பத்தி உயர்வு**

கோபிசெட்டிபாளையம்: கோபி மற்றும் நம்பியூர் வட்டாரத்தில் அதிகம் கசப்பில்லாத நாட்டு பாகற்காய் உற்பத்தி அதிகரித்துள்ளது. சுப விசேஷங்களிலும் கசப்பில்லாத பாகற்காய் மெல்ல தலைகாட்டுவதால், விலையும் சற்று உயர்ந்துள்ளது. பவானிசாகர் அணை, குண்டேரிப்பள்ளம், கொடிவேரி அணை மூலம் பாசன வசதி பெறும் பகுதிகளில் பல ஆண்டுகளாக நெல், கரும்பு, மஞ்சள் போன்ற பயிர் சாகுபடிக்குதான் அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு வந்தது.

விவசாய கூலித் தொழிலாளர்கள் பற்றாக்குறை காரணமாக கோபி, நம்பியூர் மற்றும் டி.என்.பாளையம் பகுதி விவசாயிகள், குறைந்த காலத்தில் அதிக லாபம் தரக்கூடிய தோட்டக்கலை பயிர்களை சமீப காலமாக பயிரிட்டு வருகின்றனர். தோட்டக்கலை பயிர்களான கத்தரி, வெண்டை, சின்ன வெங்காயம், தக்காளி, மிளகாய், சேனைக்கிழங்கு ஆகிய காய் வகைகள், அன்றாடம் சமையலில் முக்கிய இடம் பெறுகிறது. தேசிய தோட்டக்கலை ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவனம் மூலம் தோட்டக்கலை பயிர்களை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு மான்ய விலையில் விதை உள்ளிட்ட வசதிகள் செய்து தரப்படுகிறது. இதன் மூலம் கிராமப்புறத்தில் குறைந்தளவில் விவசாயம் நிலம் வைத்துள்ள விவசாயிகள், தோட்டக்கலை பயிர்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கின்றனர். ஆண்டு பயிர்களான கரும்பு, மஞ்சள், மரவள்ளி போன்ற பயிர்களை பயிரிட்டு வரும் விவசாயிகளும், கூலி ஆட்கள் பற்றாக்குறை காரணமாக தோட்டக்கலை பயிர்களை பயிரிடுவதில் ஆர்வம் காட்டி வருகின்றனர்.

கோபி, நம்பியூர் மற்றும் டி.என்.பாளையம் பகுதிகளில் வெள்ளை நிற நாட்டு பாகற்காய் மற்றும் பச்சை பாகற்காய் என இரண்டு வகைகள் பயிராகிறது. குருமந்தூர், கள்ளிப்பட்டி, துறையம்பாளையம், தாழ்குனி, கொளப்பலூர் உள்ளிட்ட பகுதிகளில் நாட்டு பாகற்காய் அதிகளவில் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. "வயிறு உபாதைகள் தீர பாகற்காய் சரியான மருந்து' என, டாக்டர்கள் பரிந்துரை செய்வதால், பொதுமக்கள் விரும்பி சாப்பிட ஆரம்பித்துள்ளனர். இதனால் அதிகம் கசப்பில்லாத வெள்ளை நிற பாகற்காய்க்கு அதிக கிராக்கி உள்ளது. அசைவ உணவு போல் மசால் கலந்து செய்யப்பட்ட பாகற்காய் குழம்பு, பாகற்காய் வறுவல் ஆகியவை ஹோட்டல்களில் முக்கிய உணவாக உள்ளது. "கசப்பில்லாத வெள்ளை நிற பாகற்காய் ஒரு கிலோ கடந்த மாதம் 20 ரூபாய் வரை விற்றது. வெளி மாவட்டத்தில் இருந்து வரத்து குறைந்து விட்டதால், நடப்பு மாதம் 30 ரூபாய் வரை விலை உயர்ந்துள்ளது' என வியாபாரிகள் தெரிவித்தனர்.

**சராசரி மழையாவது ஈரோடு மாவட்டத்தில் பெய்யுமா? காத்திருக்கும் விவசாயிகள்**

---

ஈரோடு: ஈரோடு மாவட்டத்தில் இந்தாண்டு சராசரி மழையாவது பெய்யுமா? என விவசாயிகள் எதிர்பார்ப்பில் உள்ளனர்.

ஈரோடு மாவட்டத்தில் கரும்பு, மஞ்சள், வாழை போன்ற பயிர்கள் அதிகளவு சாகுபடி செய்யப்படுகின்றன. பெரும்பாலும் பவானிசாகர் அணையை நம்பியே பாசன நிலங்கள் உள்ளன. ஈரோடு மாவட்டத்தில் ஓராண்டில் சராசரியாக 711.4 மி.மீ., மழை பெய்ய வேண்டும். மாதம் வாரியாக ஜனவரியில் 8.9 மி.மீ., ஃபிப்ரவரி 11.8, மார்ச் 18.1, ஏப்ரல் 49.5, மே 86.5, ஜூன் 26.1, ஜூலை 34.1, ஆகஸ்ட் 56.4, செப்டம்பர் 96.5, அக்டோபர் 168.7, நவம்பர் 108.1, டிசம்பர் 49.7 மி.மீ., சராசரியாக மழை பெய்ய வேண்டும். மாவட்டத்தில் 2008 ஜனவரியில் 25 மி.மீ., ஃபிப்ரவரி 28.8, மார்ச் 103.1, ஏப்ரல் 37.4, மே 72.4, ஜூன் 11.3, ஜூலை 41.7, ஆகஸ்ட் 122.4, செப்டம்பர் 45.7, அக்டோபர் 196.5, நவம்பர் 79.3, டிசம்பர் 21.5 மி.மீ., மழை பெய்தது. மொத்தம் 762.83 மி.மீ., மழை பெய்தது. இது சராசரி மழையை விட 51.79 மி.மீ., அதிகம். மாவட்டத்தில் 2009 ஜனவரி, ஃபிப்ரவரியில் மழை பெய்யவில்லை. மார்ச் 39.8 மி.மீ., ஏப்ரல் 18.6, மே 5.7, ஜூன் 8.4 மி.மீ., ஜூலை 15.7, ஆகஸ்ட் 64, செப்டம்பர் 91.6, அக்டோபர் 76.1, நவம்பர் 181.2, டிசம்பர் 15.4 மி.மீ., மழை பெய்தது. இது சராசரி மழையை விட 192.5 மி.மீ., மழை குறைவு.

நடப்பாண்டு ஜனவரியில் 1.2 மி.மீ., மழை பெய்தது. ஃபிப்ரவரியில் மழை பெய்யவில்லை. மார்ச் 3.9 மி.மீ., ஏப்ரல் 26 மி.மீ., மே 114.1 மி.மீ., மழை பெய்துள்ளது. ஐந்து மாதத்தில் மொத்தம் 145.2 மி.மீ., மழை பெய்துள்ளது. இன்னும் ஏழு மாதத்தில் 566.2 மி.மீ., மழை பெய்தாக வேண்டும். கேரளா, கர்நாடகாவிலும், நீலகிரியிலும் தீவிரமடைந்துள்ள தென் மேற்கு பருவமழை, இன்னும் ஈரோட்டில் தீவிரமடையவில்லை. ஜனவரியில் இருந்து மே மாதம் வரை 2008ல் 266.7 மி.மீ., 2009ல் 64.1 மி.மீ., மழை பெய்தது. 2010ல் 145.2 மி.மீ., மழை பெய்துள்ளது. 2009ம் ஆண்டை ஒப்பிடும் போது இந்தாண்டு 81.1 மி.மீ., மழை அதிகம் பெய்துள்ளது. சென்றாண்டு பருவமழை சரியாக பெய்யாததால் விவசாயப் பணிகள் பாதிக்கப்பட்டன. "நடப்பாண்டு மழை அதிகம் பெய்ய வாய்ப்பிருக்கும்' என வல்லுனர்கள் கூறுகின்றனர். தற்போது, தென்மேற்கு பருவமழை கோவை, நீலகிரி மாவட்டங்களில் ஓரளவு பெய்து வருகிறது. இந்த மழை தொடருமானால், ஈரோடு மாவட்டத்தில் அமைந்துள்ள பவானிசாகர் அணை தானாக நிரம்பிவிடும். கேரளாவில் பெய்யும் மழை உதவியால் கர்நாடகா மாநிலம் கபிணி அணைக்கு நீர்வரத்து துவங்கியுள்ளது. கபிணி நிரம்பி, மேட்டூர் அணைக்கு நீர்வரத்து துவங்கினால் ஈரோடு மாவட்ட மக்களின் குடிநீர் பிரச்னைக்கும் தீர்வு கிடைக்கும். மழை கை கொடுக்குமா என ஈரோடு மாவட்ட விவசாயிகள் காத்திருக்கின்றனர்.

**கரும்பு வெட்டும் இயந்திரம் பயன்படுத்தப்படும் சர்க்கரை ஆலை தலைமை கரும்பு அலுவலர் அறிவிப்பு**

தஞ்சாவூர்: தஞ்சை அடுத்த விளாரில் உள்ள அண்ணா சர்க்கரை ஆலை சார்பில் கரும்பு சாகுபடி விவசாயிகளுக்கு கரும்பில் சராசரி மகசூலை அதிகரித்தல், இயந்திரங்களை கொண்டு சாகுபடி செய்தல், சொட்டு நீர் பாசனம் மற்றும் உரநீர் பாசனம் செய்வது குறித்த வயல் தினவிழா முன்னோடி விவசாயி சங்கர் வயலில் நடந்தது. சொட்டு நீர் பாசன நிறுவனம் அண்ணாதுரை, முத்துகுமார், சிவகுமார் உட்பட பலர் பேசினர். கோட்ட கரும்பு அலுவலர் பார்த்திபன் வரவேற்று பேசியதாவது: நடப்பு 2010 - 11ம் அரவைப்பருவத்துக்கு கரும்பு டன் ஒன்றுக்கு இரண்டாயிரம் ரூபாய் வழங்கி தமிழக அரசு அறிவித்துள்ளது. தற்போது சராசரி மகசூல் ஏக்கருக்கு 34 டன்னாகும்.

சாகுபடியில் உள்ள சில ரகங்கள் 70 டன் வரை கூடுதல் மகசூல் தரக்கூடியது. எனவே, சாகுபடியாளர்கள் நவீன தொழில் நுட்பங்களை செயல்படுத்தி ஏக்கருக்கு 70 டன்களுக்கு மொத்த வருமானமாக 1.40 லட்சம் மற்றும் நிகர லாபமாக 60 ஆயிரம் முதல் 65 ஆயிரம் வரை கிடைக்க வாய்ப்புள்ளது. சொட்டு நீர்பாõனம் மற்றும் உரநீர் பாசனம் கரும்பின் மகசூலை 30 சதவீதம் வரை மேம்படுத்துகிறது. வேலையாட்கள் பாற்றக்குறையால் தேவையான உழவியல் முறைகள் சரிவர நேரத்தில் நடக்கவில்லை. இதற்காக பல நவீன பண்ணை கருவிகள் அறிமுகம் செய்யப்பட்டுள்ளது.

இக்கருவிகளை முன்னோடி விவசாயிகள் சிலர் உபயோகித்து நல்ல பயன் பெற்றுள்ளனர், என்றார். தலைமை கரும்பு அலுவலர் குணசேகரன் பேசியதாவது: இந்த ஆலை துவங்கி 33 ஆண்டாகிறது. ஆயிரத்து 250 டன் தினமும் அரவையில் இருந்து 1989 - 90 அரவை பருவத்தில் இரண்டாயிரத்து 500 டன்னாக உயர்த்தப்பட்டது. தற்போது 15 மெகாவாட் இணை மின் நிலையம் அமைக்க தமிழக அரசு 107 கோடி ரூபாய் செலவில் திட்டம் துவங்கியுள்ளது. இத்திட்டம் 18 மாதங்களில் நிறைவேற்றப்படும். இதனால் தினமும் 3.6 லட்சம் யூனிட்கள் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும். மொத்த உற்பத்தியில் ஐந்து மெகாவாட் மின்சாரம் ஆலையின் பயன்பாட்டுக்கும், பத்து மெகாவாட் மின்சாரம் மின்வாரியத்துக்கும் வழங்கப்படும்.

இப்பகுதி விவசாயிகளுக்கு இத்திட்டம் மிகுந்த பலன் தரும். இத்திட்டத்துக்காக கரும்பு விவசாயிகள் 6.5 கோடி ரூபாய் பங்களித்துள்ளனர். 2009 - 10ம் அரவை பருவத்தில் 3.46 லட்சம் டன் கரும்பு அரவை செய்யப்பட்டு 9.36 சராசரி சர்க்கரை கட்டுமானம் கிடைக்கப்பெற்றது. டன் ஒன்றுக்கு ஆயிரத்து 548 ரூபாய் 70 பைசா கரும்பு கிரயமாக அனைத்து விவசாயிகளுக்கும் 15 நாட்களுக்குள் வழங்கப்பட்டுள்ளது. இயந்திரம் மூலம் அறுவடை செய்ய தமிழக அரசும், ஆலை நிர்வாகமும் தீவிர நடவடிக்கை எடுத்துள்ளது. வருமாண்டில் இந்த ஆலைக்கென தனியாக இயந்திரம் கிடைக்க வாய்ப்புள்ளது. இயந்திர அறுவடையை அறிமுகப்படுத்தும் முன்பாக,

திருஆரூரான் சர்க்கரை ஆலையில் உள்ள அறுவடை இயந்திரங்களை நமது ஆலைப்பகுதியில் நவம்பர், டிசம்பர் மாதங்களில் வாடகைக்கு எடுத்து பயன்படுத்த ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அவர் பேசினார்.
ஸ்ரீஹரி ஏஜன்சீஸ் சிவகுமார் கரும்பில் பயன்படும் பல இயந்திரங்கள் குறித்து விளக்கினார். கிசான் நிறுவனம் அண்ணாதுரை சொட்டுநீர் பாசன செயல்பாட்டை விளக்கினார். நவீன சாகுபடி முறைகள் குறித்து வேளாண் விஞ்ஞானி கூத்தையன் பேசினார். கோட்ட கரும்பு பெருக்க உதவியாளர் செல்வராஜ் நன்றி கூறினார்.

**விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

தஞ்சாவூர்: தஞ்சாவூர் கலெக்டர் அலுவலகம் பிரதான கட்டிடத்தில் ஜூன் 25ம் தேதி காலை 10.30 மணிக்கு விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் சண்முகம் தலைமையில் நடக்கிறது. இக்கூட்டத்தில் கலந்து கொண்டு முன்னோடி விவசாயிகள், விவசாய சங்க பிரதிநிதிகள் விவசாயம், நீர்ப்பாசனம், கால்நடை, கூட்டுறவு, மின்சாரம், வோளாண்மை பொறியியல் துறை, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக்கழகம், தோட்டக்கலைத்துறை போன்ற விவசாயம் தொடர்புடைய கருத்துக்களை மட்டும் தெரிவிக்குமாறு, கலெக்டர் சண்முகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

**சபயறு வகைகளுக்கு உரக்கரைசல் கூடுதல் மகசூல் கிடைக்க வாய்ப்பு**

நாமக்கல்: "விவசாயிகள் பயறு வகைகளுக்கு டி.ஏ.பி., உரக்கரைசலை தெளித்து கூடுதல் மகசூல் பெற்று பயன்பெறலாம்' என, நாமக்கல் வேளாண் உதவி இயக்குனர் பேபிகலா தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கை:
நாமக்கல் வட்டாரத்தில் 500 ஏக்கர் அளவில் உளுந்து, பாசிப்பயறு வகைகள் சாகுபடி செய்யப்பட்டு பூக்கும் நிலையில் உள்ளது. இந்த தருணத்தில் டி.ஏ.பி., உரக்கரைசலை பூக்கும் பருவத்தில் ஒரு முறையும், 50 சதவீதம் பூக்கள் பூக்கும் நிலையில் மறு முறையும் தெளிக்க வேண்டும்.அதனால், பூக்கள் உதிர்வது நின்று அதிக காய்கள் பிடிப்பதுடன், நல்ல திரட்சியான மணிகளும், கூடுதல் மகசூலும் பெறலாம். ஒரு ஏக்கருக்கு 4 கிலோ உரம் 200 லிட்டர் தண்ணீர் தேவை. 4 கிலோ டி.ஏ.பி., உரத்தை 10 லிட்டர் நீரில் முதல் நாள் பிளாஸ்டிக் நாலி அல்லது மண்பானையில் ஊறவைக்கவும். மறுநாள் காலையில் தெளிந்த நீரை வடித்தெடுத்து அத்துடன் 190 லிட்டர் நல்ல நீரை சேர்த்து காலை அல்லது மாலை வேலைகளில் செடிகள் முழுக்க நன்கு நனையும்படி தெளிக்க வேண்டும். பயறு வகைகள் சாகுபடி செய்த விவசாயிகள் டி.ஏ.பி., கரைசலை தெளித்து கூடுதல் மகசூல் பெற்று பயனடையலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

---

**வெட்ட வெளிச்சம் : விவசாய மானிய திட்டங்களில் முறைகேடு விசாரணையில் சிக்கப்போவது யார்?**

சிவகங்கை : மாவட்டத்தில், விவசாயிகளுக்கான மானிய திட்டங்களில் பெரும் முறைகேடுகள் அம்பலமாகியுள்ளன. இதை விவசாய இணை இயக்குனரும் ஒத்துக்கொண்டுள்ள நிலையில், விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது. விவசாயிகள் குறைதீர் கூட்டம் கலெக்டர் மகேசன் காசிராஜன் தலைமையில் சிவகங்கையில் நடந்தது. விவசாயிகள் சங்க மாவட்ட குழு உறுப்பினர் சந்திரன் பேசுகையில், "துல்லிய பண்ணை திட்டத்தில் கோவை விவசாய கல்லூரியின் சார்பு நிறுவனம் மூலம், கரும்பு விவசாயிகளுக்கு தண்ணீர் பாய்ச்ச, குழாய் வழங்கப்பட்டது. ஒரு விவசாயிக்கு 40 ஆயிரம் ரூபாய்க்கு, 26 ஆயிரம் வரை மானியம் வழங்கப்பட்டது. இதில், சாலைக்கிராமம் பகுதியை சேர்ந்த 150 க்கும் மேற்பட்டோருக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மேல் கடன் கிடைத்தது. மானியம் முழுமையாக கிடைக்கவில்லை. ஒரு விவசாயிக்கு ஒரு முறை மட்டுமே கடன் வழங்க வேண்டும்.

ஆனால், பல முறை கொடுத்தது போல் கணக்கு காண்பித்து, முறைகேடு செய்துள்ளனர். சொட்டு நீர் பாசனம் அமைத்த விவசாயிகளுக்கு தோட்டக்கலை துறை மூலம் மூன்று கோடி 82 லட்சம் மானியம் வழங்க வேண்டும். தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் நுண்நீர் பாசன மானியம் பெற, ஆவணங்கள் வழங்கியும் இதுவரை கிடைக்கவில்லை. அதிகாரிகள் அலட்சியமாக உள்ளனர்," என்றார். விவசாய சங்கத்தினர் கூறுகையில், "இளையான்குடி அருகே கீழாயூரில் மானாவாரி விவசாயம் குறித்து பயிற்சி அளிக்கப்பட்டது. இதற்கு துறை சார்பில் நிதி ஒதுக்கப்பட்டது. விவசாயிகளுக்கு பயண செலவு, பயிற்சி அளித்தவர்களுக்கு ஊக்க தொகை வழங்காமல் முறைகேடு நடந்துள்ளது.

இளையான்குடியில் மண்புழு உரம் தயாரிப்புக்கான கடன் சிலருக்கு மட்டுமே வழங்கப்பட்டுள்ளது. மண்புழு உர கொட்டகை அமைத்த பிறகே தொகை வழங்க வேண்டும். ஆனால், எந்த பணியும் நடக்காமல் கடன், மானியம் வழங்கியுள்ளனர். முறைகேடு குறித்து விசாரணை நடத்த வேண்டும்," என்றனர். விவசாய இணை இயக்குனர் ரவிகுலசேகர பாண்டியன் கூறுகையில்,""சில இடங்களில் முறைகேடு நடந்துள்ளது. பணிகள் செய்யாமல் கடன் பெற்ற விவசாயிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும். முறைகேடு பற்றி விசாரணை நடத்தப்படும்," என்றார்.

**கொப்பரை கொள்முதலில் முறைகேடுகளை தடுக்க உத்தரவு: விஜிலென்ஸ், வேளாண் துறை கண்காணிக்கிறது**

---

பொள்ளாச்சி : கொப்பரை கொள்முதலில் விவசாயிகள் பெயரில் வியாபாரிகள் முறைகேடு செய்வதை தடுக்கவும், கண்காணிக்கவும் விஜிலென்ஸ் துறைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.தேங்காய் மற்றும் கொப்பரை விலை சரிவை தடுக்க மத்திய அரசு கொப்பரைக்கு ஆதரவு விலை நிர்ணயம் செய்து கொள்முதல் செய்கிறது. எக்னாமிக் சர்வே கமிட்டி பரிந்துரை படி மத்திய அரசு "நேபட்' நிறுவனம் மூலம் கொப்பரை கிலோவுக்கு 44.50 ரூபாய் விலை நிர்ணயம் செய்து "டான்பேட்' நிறுவனம் மூலம் கொள்முதல் செய்கிறது.

தமிழகத்தில் பட்டுக்கோட்டை, தாராபுரம், பொள்ளாச்சி, உடுமலை, பல்லடம் உள்ளிட்ட மையங்களில் கொப்பரை கொள்முதல் செய்யப்படுகிறது. கடந்த ஏப். 18ம் தேதி முதல் கோவை மாவட்டத்தில் கொப்பரை வர்த்தகம் நடக்கிறது.கடந்தாண்டு கொள்முதல் செய்யப்பட்ட கொப்பரை அரசு சேமிப்பு கிடங்கு குடோன்களில் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. அதனால், தற்போது கொள்முதல் செய்யப்படும் கொப்பரையை இருப்பு வைக்க வசதியில்லாததால் கொள்முதல் நிறுத்தம் செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் இருப்பு கொப்பரை கிலோவுக்கு 35.30 ரூபாய் விலை நிர்ணயம் செய்து "நேபட்' நிறுவனம் விற்பனை செய்யும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. இருப்பு கொப்பரை முழுவதும் காலியானதும், நடப்பு ஆண்டுக்கு கொப்பரை வர்த்தகம் விறுவிறுப்படையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.கடந்தாண்டு மாநிலம் முழுவதும் 30 ஆயிரம் டன் கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளது. தென்னை விவசாயிகளில் 10 சதவீதம் பேர் மட்டுமே கொப்பரை உற்பத்திக்கு உலர்களம் அமைத்துள்ளனர். இந்நிலையில் அதிகளவில் கொப்பரை கொள்முதல் செய்யப்பட்டுள்ளால், கொள்முதலில் முறைகேடு நடந்திருப்பதை அதிகாரிகள் உறுதி செய்துள்ளனர்.

அதனால், நடப்பு ஆண்டில் கொப்பரை கொள்முதலை கண்காணிக்க அரசு திட்டமிட்டுள்ளது. கொள்முதலுக்காக பதிவு செய்யும் விவசாயிகள் பட்டியல், அவர்களின் விவசாய நிலப்பரப்பு, கொப்பரை உற்பத்திக்கான <உலர்களம் வசதி, கொப்பரை <உற்பத்தி திறன் ஆகியவற்றை கண்காணிக்க வேளாண் துறை மற்றும் போலீஸ் விஜிலென்ஸ் துறைக்கு அரசு உத்தரவிட்டுள்ளது.கடந்த ஆண்டு கொப்பரை கொள்முதல் செய்த விசவாயிகளின் பட்டியலை ஆய்வு செய்து, தவறு செய்த அதிகாரிகள், வியாபாரிகளிடம் விசாரிக்கவும் அரசு வலியுறுத்தியுள்ளது.

கொள்முதலில் முறைகேடு நடந்தாலோ, கொள்முதல் செய்வதற்கு அதிகாரிகள் யாராவது லஞ்சமாக பணம் கேட்டாலோ லஞ்ச ஒழிப்பு போலீசாருக்கு புகார் தெரிவிக்க வேண்டும் என்று விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த வேளாண் துறையினருக்கு

உத்தரவிடப்பட்டுள்ளது.அதனால், கொள்முதல் நிலையத்தில் கொப்பரை கொள்முதல் செய்த விவசாயிகளின் பட்டியலை வேளாண் துறையினர் சேகரிக்க துவங்கியுள்ளனர்.

மாநிலத்தின் கொப்பரை கொள்முதலில் கோவை, திருப்பூர் மாவட்டத்தில் 90 சதவீதம் நடந்துள்ளது. அதனால், பொள்ளாச்சி, உடுமலை, பல்லடம், தாராபுரம் ஆகிய கொள்முதல் மையங்களில் அதிகாரிகள் விசாரணையை துவக்க திட்டமிட்டுள்ளனர்.இதனால், விவசாயிகளின் பெயரில் கொப்பரை விற்பனை செய்தற்காக "கமிஷன்' கொடுத்த வியாபாரிகளும், கைநீட்டிய அதிகாரிகளும், தவறுகளுக்கு துணை சென்ற உயர் அதிகாரிகளும் கலக்கமடைந்துள்ளனர்.

**மின் தடையால் தென்னை விவசாயம் பாதிப்பு**

தேனி : மின்தடையால் தென்னை விவசாயம் பாதிக்கப்பட்டுள்ளதாக கோம்பை தென்னை விவசாய சங்கங்களின் கூட்டுக் குழு சார்பில் குமரேசன், கிருஷ்ணமூர்த்தி, குபேரன், ராமராஜ் உட்பட விவசாயிகள் கலெக்டர் முத்துவீரனை சந்தித்து மனு கொடுத்துள்ளனர். மனுவில் கூறியுள்ளதாவது: கோம்பையில் 13 மணி நேரம் அறிவிக்கப்படாத மின் தடை நிலவுகிறது. மின்தடை நேரத்தை கணிக்க முடியவில்லை. மின்வாரிய அதிகாரிகளிடம் கேட்டால் முறையான பதில் இல்லை. இதனால் தென்னை மரங்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாமல் மகசூல் பாதிக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. முறையற்ற மின் சப்ளையால் மின்மோட்டார்களும் அடிக்கடி பழுதடைகின்றன. இப்பகுதியில் தினமும் நூற்றுக்கும் மேற்பட்ட மாட்டு வண்டிகளில் மணல் திருட்டு நடப்பதால் ஓடைப்பாதைகள் எல்லாம் பள்ளமாகி போக்குவரத்துக்கு பயனற்றதாக மாறிவிட்டன. நிலத்தடி நீர்மட்டம் குறைந்து வருகிறது. குடிநீர் தட்டுப்பாடும் உள்ளது. குளங்களில் ஆக்கிரமிப்புகளை அகற்றி ஓடைகளில் தடுப்பணை கட்ட வேண்டும் என்றனர்.

**சொட்டு நீர் பாசன கடன் வழங்க வங்கி நிர்வாகங்கள் தயக்கம்... காய்கறி சாகுபடி செய்ய முடியாமல் விவசாயிகள்**

ஸ்ரீவில்லிபுத்தூர் : சொட்டு நீர் பாசன கடன் வழங்க வங்கிகள் தயக்கம் காட்டுவதால் விவசாயிகள் தவித்து வருகின்றனர். தமிழக அரசு விவசாயிகளுக்கு தோட்டக்கலைத்துறை, வேளாண்மைத்துறைகள் மூலம் கத்தரி, வெண்டை, தக்காளி, வாழை, வெங்காயம், மிளகாய், தென்னை, மக்கா சோளம், கரும்பு போன்ற பயிர்களுக்கு சொட்டு நீர் பாசனம் அமைக்க 65 சத மானியம் வழங்கி வருகிறது. இத்திட்டத்தில் விவசாயிகளுக்கு விதை,உரம் ,பூச்சி மருந்துகள் இலவசமாக வழங்கபடுகிறது. ஸ்ரீவி., ராஜபாளையம், வத்திராயிருப்பு உட்பட மாவட்டத்தின் பல பகுதிகளில் கடந்த ஒராண்டாக சரிவர மழை பெய்யவில்லை. இதனால் விவசாயிகள் நெல், கரும்பு பயிர்களுக்கு போதிய தண்ணீர் கிடைக்காததால் அப்பகுதியில் தோட்டக்கலை பயிர்களை விவசாயம் செய்ய ஆர்வமாக உள்ளனர்.

இதில் துல்லிய பண்ணை திட்டத்தில் விதை , உரம், பூச்சி கொல்லி மருந்துகள் இலவசமாக வழங்கப்படுவதால் இத்திட்டத்தில் விவசாயம் செய்ய தீவிரம் காட்டி வருகின்றனர். இத்திட்டத்தில் விவசாயிகள் சொட்டு நீர் முறையில் பாசனம் செய்தால் மட்டுமே இதன் பலன்களை அனுபவிக்க முடியும். சொட்டு நீர் பாசனத்திற்கு அரசு 65 சத மானியம் அளித்தாலும் விவசாயிகள் தங்கள் பங்கிற்கு செலுத்த வேண்டிய பணத்திற்காக விவசாயிகள் தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிகள், கூட்டுறவு நிலவள வங்கிகளிலும் விவசாய கடன்களுக்கு விண்ணப்பித் துள்ளனர். அதற்கு இவ்வங்கிகள் கேட்கும் தீர்வை ரசீது, கடன் இல்லா சான்று உட்பட 15 வகையான ஆவணங்களையும் கொடுத்தும் கடன் வழங்க தயக்கம் காட்டி வருகின்றன.

இதற்கு வங்கிகள், விவசாயிகள் கடன் தள்ளுபடி மனப்பான்மையில் பணத்தை திருப்பி செலுத்துவதில்லை என காரணம் கூறுகின்றன. தற்போதே சொட்டு நீர் பாசனம் அமைக்கும் பணியை ஆரம்பித்தால் தான் ஆடிப்பட்டத்திற்கு விதைகளை நடும் பணியை துவக்க முடியும். ஆனால் வங்கிகள் கடன் வழங்க தயக்கம் காட்டி வருவதால் விவசாயிகள் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் இத்திட்டத்தில் வசதி படைத்த விவசாயிகள் மட்டுமே மானியம் போக மீதி பணத்தை செலுத்தி பயன் பெற்று வருகின்றனர். ஏழை விவசாயிகள் எவ்வித பலனும் பெற முடியாத நிலை உள்ளது. சொட்டு நீர் பாசனத்திற்கு அனைத்து விவசாயிகளுக்கும் கடன் வழங்க வேண்டும் என விவசாய சங்கங்கள் வலியுறுத்தி உள்ளன.

**மண் பரிசோதனை செய்ய விவசாயிகளுக்கு அழைப்பு**

ராஜபாளையம் : ராஜபாளையம் பகுதியில் கோடை கால இரண்டாம் போக நெல் சாகுபடி முடிந்து, தற்போது அறுவடை பணிகள் நடந்து வருகின்றன. அடுத்து வர உள்ள மழைக் காலத்தில் விவசாயிகள் பயிர் சாகுபடியை துவக்கும் முன், மண் பரிசோதனை செய்வது அவசியமாகும். மண்ணில் தற்போதுள்ள சத்துக்களை அறிந்து கொண்டால், பற்றாக்குறையாக உள்ள சத்துக்களுக்கான உரங்களை மட்டும் இடுவது போதுமானது. இதன் மூலம், உரத் தேவை குறைவதுடன், விவசாயிகளின் செலவுத் தொகை குறையும். எனவே, விவசாயிகள் தங்கள் வயலில் உள்ள மண்ணை, அதற்கென அறிவுறுத்தப்பட்டுள்ள முறைப்படி சேகரித்து, ராஜபாளையம் விவசாயத்துறை அலுவலகத்தில் வழங்கி பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என விவசாய உதவி இயக்குனர் தனசேகரன் கேட்டுக் கொண்டுள்ளார். ஒரு மண் மாதிரியை பரிசோதிப்பதற்கான கட்டணம், 5 ரூபாய். ஒரு மாதத்திற்குள் மண் வளம் குறித்த அறிக்கை விவசாயிகளுக்கு கிடைக்கும்.

**தக்காளி விலை உயர்வால் விவசாயிகள் மகிழ்ச்சி**

பல்லடம் : பல்லடம் பகுதியில் ஜல்லிப்பட்டி, கேத்தனூர், குள்ளம்பாளையம், செலக்கரிச்சல், வாரப்பட்டி, அய்யம் பாளையம், புள்ளியப்பம்பாளையம் உள்ளிட்ட இடங்களில் 3,000 ஏக்கர் பரப்பளவில் பவானி, லட்சுமி, 5005 வீரிய ரக தக்காளி சாகுபடி செய்யப் பட்டுள்ளது.வீரிய ரகதக்காளி அபரிமித உற்பத்தி காரணமாக கடந்த மார்ச் மாதம் ஒரு கிலோ தக்காளி கொள்முதல்விலை வெறும் நான்கு ரூபாயாக இருந்தது. இந்த விலை பறிப்புக் கூலி, விற்பனைக்கு கொண்டு செல்வதற்கான ஏற்று, இறக்கு கூலி, வேன்வாடகை, மார்க்கெட் சுங்கம் போன்ற செலவினங்களுக்கு கூட கட்டுபடி ஆகாததால் பல்லடம், சுல் தான்பேட்டை பகுதியில் நூற்றுக்கணக்கான தக்காளி விவசாயிகள் தக்காளிகளை பறிக்காமல் அப்படியே விட்டனர்.

சிலர், உழுது தக்காளி செடிகளை அழித்து மாற்றுப்பயிர் செய்ய நிலத்தை தயார்படுத்தினர். தக்காளி செடிகள் அழிப்பு காரணமாக பல்லடம் , சுல்தான்பேட்டை வட்டாரத் தில் தக்காளி உற்பத்தி கணிசமாக பாதிக்கப்பட்டது.கடந்தமாதம் கடும் வெயிலால் தக்காளி உற்பத்தி பாதிப்பு, போதிய தண்ணீர் வசதியின்றி தக்காளி செடிகள் காய்தல் மற்றும் தர்மபுரி, கிருஷ் ணகிரி பகுதிகளில் இருந்து கோவை, திருப்பூர் மார்க்கெட் பகுதிக்கு தக்காளிவரத்து குறைவு ஆகியவை எதிரொலியாக உள்ளூர் தக்காளி கொள்முதல்விலை கிலோ எட்டு ரூபாய், 10 ரூபாய், 12 ரூபாய் என அதிகரித்து தற்போது கிலோ 17 ரூபாயாக உயர்ந்துள்ளது. தக்காளிக்கு நல்ல கொள்முதல்விலை கிடைத்து வருவதால் பல்லடம் பகுதி விவசாயிகள் உற்சாகம் அடைந்துள்ளனர்.